# உங்களுக்கு மருத்துவக் காப்புறுதி பற்றித் தெரியுமா?



## மருத்துவக் காப்புறுதி என்றால் என்ன?

நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில், அவசர விபத்தின் போது, அகால மரணத்தின் போது அல்லது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களினால் செலுத்த வேண்டிய மருத்துவ கட்டணங்களை செலுத்தி தீர்ப்பதற்குத்தான் மருத்துவக் காப்புறுதி அவசியமாகின்றது. தவணைக் கட்டணத்தை உரிய நேரத்தில் செலுத்தி, காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக உரிய செலவினை மீள காப்புறுதி கோரிக்கை செய்துகொள்ள முடியும்.

## ஏன் மருத்துவக் காப்புறுதி அவசியமாகின்றது?

பல்வேறுபட்ட நோய்கள், திடீர் விபத்து, சத்திரசிகிச்சை போன்றவை யாருக்கும் எந்நேரத்திலும் ஏற்படக்கூடும். அவ்வாறான நேரத்தில் ஏற்படும் செலவினைத் தீர்ப்பதற்கு மருத்துவக் காப்பறுதி மிக முக்கியமானதாகும். மருத்துவக் காப்புறுதியில்லாவிட்டால், இவ்வாறானதொரு செலவினை உங்கள் சேமிப்பில் இருந்து அல்லது கடனைப் பெற்றே மேற்கொள்ளல் வேண்டும்.





## உங்களுக்குப் பொருத்தமான காப்பறுதிப் பூட்கையினைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு ?

உங்களின் தேவை மற்றும் வசதிக்கு அமைவாக பல்வேறுபட்ட காப்பீடுகளை வழங்கும் மருத்துவ காப்புறுதி வகைகள் உள்ளன. உங்களுக்குப் பொருத்தமான காப்புறுதியைத் தேர்ந்தெடுப்பதற்கு, தற்போது சந்தையில் கிடைக்கப்பெறும் காப்புறுதி வகைகள் தொடர்பாக தேடிப்பார்த்து, பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம், காப்புறுதித் தரகு நிறுவனம் அல்லது தகைமை பெற்ற காப்புறுதி முகவரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## காப்புறுதிப் பத்திரம் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?



மருத்துவக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது, காப்புறுதிப் பத்திரத்தை நன்றாக வாசித்துக்கொள்ளுங்கள். காப்புறுதிப் பூட்கையின் ஊடாகக் கிடைக்கப்பெறும் நன்மைகள், காப்பீடு செய்யப்படும் நோய்கள், என்பவற்றுடன் காப்புறுதி கோரிக்கையின் போது ஏதும் விசேட நிபந்தனைகள் உள்ளதா? எவ்வித விசேட நிபந்தனைகளும் இல்லாத நோய்கள் எவை?, அதேபோல், காப்புறுதிக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் போது பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் எவை? இவை அனைத்தும் காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சமூக வலைத்தளத்தினுள் நுழையுங்கள்.




**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

11 வது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.
தொலைபேசி : (011) 2396184-9 தொலைநகல்: (011) 2396190
மின்னஞ்சல் info@ircsl.gov.lk இணையம் www.ircsl.gov.lk